**இணையதள அறிவிக்கை**

**ந.க.எண்.பிடி1/422/2020,** **நாள்–26.09.2020.**

**சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை தமிழ்நாடு.**

**கடலூர் மாவட்டம்.**

**அறிவிக்கை (Notification)**

**பள்ளி சத்துணவு மைய அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகளில் அமைப்பாளர் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்.**

அரசாணை (நிலை) எண்.28, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்(சந.4–2) துறை, நாள்–05.09.2020–ன்படி, கடலூர் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் / நகராட்சிகளில் காலியாகவுள்ள அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் அமைப்பாளர் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு அரசாணை (நிலை) எண்.163, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்(சந.2) துறை, நாள்–18.08.2010 மற்றும் அரசாணை (நிலை) எண்.142, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள்–06.07.2010–ன்படி இனசுழற்சி ஒதுக்கீடு அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்ட பள்ளி சத்துணவு மையங்களில் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர் களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

காலிப்பணியிட விவரங்கள், இன சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மைய விவரங்களை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் / நகராட்சிகளில் தெரிந்து கொள்ளலாம். **விண்ணப்பம் பெறப்படும் கடைசி நாள்:** 01.10.2020 மாலை 5.00 மணி வரை அதன் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தகுதி உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் நேர்முக தேர்வு நடைபெறும் நாள் விவரம் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்படும். விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் / நகராட்சிகளில் நேரிடையாக சமர்ப்பித்து உரிய ஒப்புகை சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் கல்வித் தகுதி சான்றிதழ், வயது சான்றிதழ், சாதிச் சான்றிதழ், குடும்ப அட்டை, இருப்பிடச் சான்றிதழ், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவராயின் அதற்கான சான்றிதழ்களின் அத்தாட்சி செய்யப்பட்ட நகல் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றிதழ்கள் அளிக்கப்பட வேண்டும்.

| பதவி | கல்வி தகுதி | வயது வரம்பு |
|---|---|---|
| சத்துணவு அமைப்பாளர் | ➢ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 10ஆம் வகுப்பு தேர்ச்சி<br>➢ பழங்குடியினர் 8ஆம் வகுப்பு தேர்ச்சி | ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ பழங்குடியினர் **(ST)** 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் |

| பதவி | கல்வி தகுதி | வயது வரம்பு |
| --- | --- | --- |
| | அல்லது தோல்வி | இருக்க வேண்டும்.<br>❖ விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயது மிகாதவராகவும் இருக்க வேண்டும். |
| சமையலர் | ➢ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 8ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தோல்வி<br>➢ பழங்குடியினர் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் | ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயது மிகாதவராகவும் இருக்க வேண்டும். |
| சமையல் உதவியாளர் | ➢ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 5ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தோல்வி<br>➢ பழங்குடியினர் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் | ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>❖ விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயது மிகாதவராகவும் இருக்க வேண்டும். |

(ஒம்/– )

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**கடலூர்.**

/ஆணைப்படி/

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
(சத்துணவு), கடலூர்.